திலும் அவர்களுக்கு எவ்விதச் சலுகையும் கிடைப்பதில்லை. ஆகையால் அவர்களுக்கு எல்லாச் சலுகைகளையும் கொடுப்பதுபற்றி, மறு பரிசீலனை செய்து, எந்தத் தடங்கலும் இல்லாத முறையில், தகுந்த சான்றிதழ் கொண்டுவந்தால் அவர்களுக்கு சலுகைகள் கிடைக்க ஏற்பாடு செய்து இந்த ஜாபிதாவை புனர் பரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இதுபோன்ற வேண்டுகோளை அல்லது கோரிக்கையை குழுவினருடைய அறிக்கை வந்த பிறகு, பொதுவாகப் பரிசீலனை செய்து, தக்க முடிவு எடுக்கப்படும்.

திரு. ப. மகாதேவன்: குமரி மாவட்டத்தில் மட்டும் வாழ்கின்ற நாஞ்சில் நாடு வேளாளர் என்று சொல்கிற மக்களுக்கும் பின்தங்கிய வகுப்பினருக்கு அளிக்கக்கூடிய சலுகைகளை கொடுக்க முடியுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இதுபோன்ற கோரிக்கைகளை யெல்லாம் ஒழுங்குற அவர்கள் பரிசீலனை செய்து, அரசுக்கு அறிக்கை தரவேண்டும் என்ற அடிப்படையில் தான் இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது, கனம் உறுப்பினர் தெரிவித்த அந்த கோரிக்கையும் இந்தக் குழுவினுடைய அறிக்கைக்குப் பிறகு பரிசீலிக்கப்படும்.

Thiru K. S. KOTHANDARAMIAH : There is need to revise the list of backward classes because among the Telugu backward classes there is a caste called Kapu (cultivators). In Kanada the same caste is called ' Vakkaliga ' If you say ' Vakkaliga ' he is considered backward. But if he is called ' Kapu ' no concession is given. He is not considered backward. Only if he is called ' Vakkaliga ' he is given backward class concession. So I request that the name of ' Kapu ' be included in the list of backward classes. There are other castes. There is the ' Jalakara ' Caste that is one who cleans the impliments of goldsmiths. He gets about three or four annas per day. He is very poor. Their name should be included in the backward class list. Will the Government take into consideration my request and include the classes in the revised list of backward classes?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கோரிக்கைகளையெல்லாம், அவர்கள் அந்தக் குழுவினிடத்திலே கூட நேரில் சந்தித்து அவர்களுடைய எண்ணங்களை அறிவிக்கலாம். அல்லது, சம்பந்தப்பட்ட வகுப்பினர்களும் அறிவிக்கலாம். அவ்வாறு அறிவித்த பிறகு, குழுவினுடைய பரிந்துரைகளின் மீது அரசு முடிவெடுக்கும்பொழுது, உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கோரிக்கையையும் நினைவில் வைத்து, அரசு ஆவன செய்யும்.

* 629 வின—திரு. டி. மார்டின்: மாண்புமிகு பின்னிலை வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) Joint Council of Christians of Tamil Nadu 10—1—70 தேதியிட்ட மனு ஒன்றினை தமிழ்நாடு அரசுக்கும், பின்தங்கிய வகுப்பினர் குழுவுக்கும் அனுப்பியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) ஆம்.

(இ) பின்தங்கிய வகுப்பினர் நலக் குழுவின் பரிந்துரை அரசுக்கு கிடைத்த பிறகு இதுபோன்ற கோரிக்கைகளை அரசு ஆலோசிக்கும்.

1970 ஏப்ரல் 1]

THIRU T. MARTIN : The Supreme Court has held in some cases that religion should not be the sole basis for considering the social and economic backwardness of a particular community May I request the Hon. Minister to state whether this Government will send a directive to that Commission to consider this aspect also and then include those backward class persons who have changed their religion in the list of Backward classes, ignoring religion as sole basis?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: ஏற்கனவே எந்தெந்த வகுப்பு பின்தங்கிய வகுப்பு என்று நாம் வரையறுத்து வைத்திருக்கிறோமோ அந்த வகுப்பினர்களுக்கு மேற்கொண்டு என்னென்ன நன்மைகளைச் செய்ய வேண்டும் என்பதை ஆராய்வதற்காக இந்தக் குழு அமைக்கப் பட்டிருக்கிறது. கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கோரிக்கை களைப்பற்றி கிறிஸ்துவ இணைப்புக் குழுத் தலைவர் என்னிடத்திலே ஒரு மனுவைத் தந்திருக்கிறார்கள். குழுவின் அறிக்கை வந்த பிறகு அதுகுறித்து ஆலோசிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: பேரவைத் தலைவர் அவர்களே, கிறிஸ்துவ சமுதாயக் கூட்டுக் குழுவினர் என்னென்ன கோரிக்கைகளைச் சமர்ப்பித்திருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கிக் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இப்பொழுது அதைத் தெரிவிப்பது குழுவுக்கு நாம் அளித்துள்ள அதிகாரத்தை மீறுவதாகும் என்று நான் கருதுகிறேன்.

திரு. கே. விநாயகம்: இப்பொழுது நடைமுறையில் இருக்கிற பிற்பட்ட வகுப்பினர் பட்டியலே தவறு என்று இந்த அரசாங்கம் கருதுகிறதா? அதில் முற்போக்கானவர்களும் நுழைந்திருக்கிறார்கள், பிற்போக்கானவர்களும் விடுபட்டிருக்கிறார்கள் என்கிற கொள்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டி ருக்கிறதா? இந்த அறிக்கை வந்த பிறகு, சென்ட்ரல் கவர்ன்மெண்டு கா கா சாஹிப் கலேல்கர் ரிபோர்டை உடைப்பிலே போட்டமாதிரி, நீங்கள் இந்த ரிபோட்டை உடைப்பில் போடமாட்டீர்கள் என்று உறுதிமொழி தரமுடியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடைப்பிலே போடுவது என்றெல் லாம் சொல்வது குற்றச்சாட்டு. கேள்வியைப் போடுங்கள்.

THIRU K. VINAYAKAM : I stand by it. They have not done it.

குற்றச்சாட்டிற்கு நான் பொறுப்பேற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு கூடாது.

திரு. கே. விநாயகம்: இந்தக் குழுவின் சிபாரிசுகளை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நியாய, அநியாயங்கள் எது என்று ஆராய்ந்து குழு நல்ல முடிவை அளிக்கும் என்றுதான் அரசு எதிர் பார்க்கிறது, நாடும் எதிர்பார்க்கிறது. 'அங்கே உடைப்பிலே போட்டார்களே அதேபோல் இங்கும் உடைப்பிலே போடாமல் இருப்பீர்களா' என்று உறுப்பினர் கேட்கிறார். எங்கே தேடிப் பார்த்தாலும் உடைப்பு இருப்பதாகத் தெரியவில்லை. அப்படிப் போடுவதென்றால் உங்களிடத்திலே இருக்கிற உடைப்பிலேதான் போட வேண்டும், வேறு உடைப்பு இல்லை.